# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 183/2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : பாண்டிச்செல்வி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2024.

\- - - - - - -

1 வது எதிரி ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. 2 ம் எதிரி இறந்துவிட்டார். 3 ம் எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் உடுமலைப்பேட்டையில் குடியிருந்துவருகிறேன். எதிரிகள் ஜோதிலிங்கம், காத்தம்மாள், கூடலிங்கம் ஆகியோர்களைத் தெரியும். எனது கணவர் ஜோதிலிங்கம் திருமணம் முடிந்த காலத்திலிருந்தே சந்தேகப்பட்டு என்னுடன் சண்டை போடுவார். கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் நான் சிசேரியன் மூலம் குழந்தை பெற்றிருந்தேன். அப்போது என்னோடு எனது கணவர் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். எனது கணவர் , எனது மாமியார் ஆகியோர் கிராம பஞ்சாத்து மூலம் எனது அப்பா, அம்மா இருவரும் என்னை

பார்க்க வரக்கூடாது என்று எழுதி வாங்கினார்கள். அப்போது எனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு என் அம்மாவிற்கு போன் மூலம் தகவல் சொல்லி, அவர் என்னை வந்த பார்த்தார். இதற்கு என்னை அசிங்கமான வார்த்தைகளால் பேசி எதிரிகள் மூவரும் என்னை அடித்துக் காயப்படுத்தினார்கள். எனது மாமனார் கல்லை எடுத்து என்னை நெற்றியில் எறிந்தார். என் அம்மாவை 3 பேரும் கட்டையால் அடித்து காயப்படுத்திவிட்டார்கள். என் கணவர் என்னை கட்டையால் முதுகிற்கு பின்புறத்தில் அடித்தார். இந்த சம்பவம் என் அம்மா, என் வீட்டிற்கு வரும்வழியில் வழிமறித்து தாக்கியதாகும். சம்பவத்திற்கு பின்னர் கல்லுப்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று நானும், என் அம்மாவும் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அது அ.சா.ஆ-1 ஆகும். அன்றைக்கே நானும், என் அம்மாவும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள் சேர்த்தார்கள். மருத்துவமனையில் உள்நோயாளியாக 7 நாட்கள் சிகிச்சைப் பெற்றோம். போலிசார் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்ததார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u>

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை வாக்குமூலமாகத்தான் கொடுத்தேன், போலிசார்தான் எழுதினார்கள். காயமான அன்று மறுநாளும் விசாரித்தார்கள். புகாரில் 2 பேரும் கையெழுத்துப் போட்டோம். நான் மருத்துவமனைக்கு வரும்போது எத்தனை மணியிருக்கும் என்றால் காலை 11 மணிக்கு சண்டை நடந்தது. சுமார் 1 மணி நேரம் கழித்து மருத்துவமனைக்குச் சென்றிருப்பேன். மருத்துவரிடம் எனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது எனச் சொன்னேன். மருத்துவரிடம் எந்தெந்த

இடத்தில் காயம் இருந்தது என சொன்னேன் என்றால் சரிதான். நெற்றியில் ரத்தம் வந்ததாக என்றால் ரத்தம் வந்தது. ரத்தம்பட்ட சாக்கெட் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் சரிதான். எனக்கு என் கணவரை பிடிக்காமல் திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னதுபோன்றுதான் போலிசார் விசாரணையில் சொன்னேன். தற்போது, என் கணவரை விட்டுவிட்டு வேறு திருமணம் செய்து 2 குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். என் பழைய கணவர் வீட்டிற்கும் சண்டை நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ரோட்டில் சண்டை நடந்தது- வீட்டில் சண்டை நடக்கவில்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், என் கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றுவதற்காக எங்கோ ஏற்பட்ட காயத்திற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உசிலம்பட்டி மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் சென்றேன், வேறு மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் செல்லவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.08.08 17:13:54 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.